**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S.No. 169/2002**

Deposition of D**.W.-1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court on 01.10.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி. சித்ரா | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Calling | : | Age | : |

துவக்க நேரம் : 12.45 P.M.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

1. எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால், 1986-ல் திருமணம் ஆனது. எனக்கு திருமணம் ஆனபொழுது எனது கணவரின் வீடு வில்லை வீடு என்றால் சரிதான். அந்த வில்லை வீட்டில்தான் நான் தற்பொழுதும் குடியிருந்து வருகிறேன் என்றால் இல்லை. அது மேற்கு தெருவில் உள்ளது. நான் வாங்கிய வீட்டில் தற்பொழுது குடியிருக்கிறேன்.

2. நான் வாங்கிய வீடும், வில்லை வீடுதான் என்றால் ஆமாம். நான் வாங்கிய வீட்டிற்கு கிழக்கு திசையில் வீட்டை ஒட்டினார்போல் ஒரு மணிவேல் என்பவரது வீடு உள்ளது என்றால் சரிதான்.

3. எனது வீடு, மணிவேல் வீடு இவை அனைத்தும் ஆரம்பத்தில் ஒரு முத்து உடையார் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த முத்து உடையாருக்கு ஐந்து மகன்கள் என்றால் சரிதான். அவர்களின் பெயர் முத்துசாமி உடையார், கூத்தப்பன் உடையார், ராமலிங்க உடையார், குழந்தைவேல் உடையார் மற்றும் துரைசாமி உடையார் என்றால் சரிதான்.

4. மேற்கண்ட முத்துசாமி உடையாரின் ஐந்து மகன்களும் அவர்களுக்குள் வாய்மொழி பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. குழந்தைவேல் உடையாருக்கு இரண்டு மகள்கள் என்றால் சரிதான். அவர்களின் பெயர் கூத்தாயி, மகாலட்சுமி.

5. மகாலட்சுமியின் மகன்தான் மணிவேல் என்றால் சரிதான். துரைசாமி உடையார் மகன் அழகுவேல் என்றால் சரிதான். நான் துரைசாமி மற்றும் அவரது மகன் அழகுவேல் என்பவரிடம் தான் நான் எனது வீட்டை வாங்கினேன் என்றால் சரிதான்.

6. நான் கடந்த 20.08.1999-ல் மேலே கண்ட துரைசாமி உடையார் மற்றும் அழகுவேல் ஆகியோரிடம் விலைக்கு வாங்கினேன் என்றால் சரிதான். நான் வாங்கிய வீட்டிற்கும், மணிவேல் உள்ள வீட்டிற்கும் இரண்டு மூலப்பத்திரங்கள் உள்ளன என்றால் சரிதான். அதில் ஒரு பத்திரம் 04.12.1932 தேதியிட்ட கிரையபத்திரம் என்றாலும் வேலாயுத உடையார் மகன் குழந்தைவேல் உடையார் என்பவர், கூத்த உடையார் மகன் முத்து உடையாருக்கு எழுதிவைத்த பத்திரம் என்றால் சரிதான். அந்த பத்திரம் பதிவு செய்யப்பட்ட பத்திரம் என்றால் சரிதான்.

7. கடந்த 04.12.1932-ல் தேதியிட்ட பத்திரத்தில், கிழமேல் காலடி 36 அடியும், தென்வடல் காலடி 42 என்று உள்ளது என்றால் சரிதான். இதற்கு செக்குபந்தி தென்வடல்

சந்திற்கம் மேற்கு, நல்லு உடையார் மனைக்கும் வடக்கு, பழனிமுத்து பண்டாரம் மனைக்கு கிழக்கு, ராஜவீதிக்கு தெற்கு ஆகும் என்றால் சரிதான். இதன் மத்தியில் 36X42 காலடி என்றால் சரிதான்.

8. கடந்த 23.02.1948 தேதியிட்ட மூலபத்திரம், ஒரு பழனிமுத்து அய்யர் மனைவி குள்ளம்மாள், விசாலாட்சி ஆகியோர் கூத்தப்ப உடையார் மகன் முத்துஉடையாருக்கு கிரையம் செய்து வைத்த ஆவணம் என்றால் ஆமாம்.

9. கூத்தப்ப உடையார் மகன் முத்துஉடையார்தான் மேலே கண்ட ஐந்து நபர்களின் அப்பா என்றால் சரிதான். எங்கள் ஊரில் பண்டாரம் சமூகத்தை சேர்ந்தவர்களை அய்யர் என்று அழைப்பார்கள் என்றால் சரிதான். அவர்கள் கோயிலில் பூஜை செய்வார்கள் என்றால் சரிதான்.

10. கடந்த 23.02.1948 தேதியிட்ட பத்திரத்தில், கிழமேல் காலடி 20, தென்வடல் காலடி 39 என்று அளவில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த காலடிக்கு நாற்புற எல்லைகளாக ராஜவீதிக்கும் தெற்கு, முத்துஉடையாருக்கு சொத்திற்கும் மேற்கு, அரசன்குடி வேலாயுதம் வகையறாவின் மனைக்கு கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11. மணிவேல் இடத்திற்கும், என்னுடைய இடத்திற்கும் தென்புறத்தில் கிழக்கில் பொன்னுசாமி உடையாருக்கும், மேற்கில் அரசன்குடி வாதி வகையறாவிற்கும் பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் மேற்சொன்ன இரண்டு மூலப்பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் அல்லாமல் சொத்துக்கள் தவிர வேறு பூர்வீக சொத்தும் முத்துஉடையாருக்கு அங்கு இருந்துள்ளது.

12. முத்துஉடையாருக்கு நான் மேலே சொன்னவாறு பூர்வீக சொத்து ஒன்று

இருப்பதாக சொல்லியுள்ள விவரத்தை நான் எதிருரையும், எனது சாட்சியத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அது பூர்வீக சொத்து என்று சொன்னார்கள், பத்திரம் இல்லை என்று சொன்னார்கள். அந்த பூர்வீக சொத்து யாரிடம் உள்ளது என்றால் எங்கள் இருவரிடம்தான் உள்ளது. அந்த பூர்வீக சொத்து தெற்கில் எந்த பக்கம் உள்ளது என்றால் அரசன்குடி கதிர்வேல் வகையறா இடத்திற்கும் வடக்கிலும், ராஜவீதிக்கும் தெற்கிலும், குழந்தைவேல் உடையார் இடத்திற்கும் மேற்கண்ட இரண்டு மூலப்பத்திரத்தில் கண்டுள்ள இடத்திற்கும் அருகில் இருந்ததாக சொன்னார்கள்.

13. முத்துஉடையாருக்கு பூர்வீக சொத்து இருந்ததாக நான் சொல்லும் இடத்திற்க கிழமேல் அடி தென்வடல் அடி என்னவென்று எனக்கு தெரியாது என்றால் சரிதான் ஆனால் மொத்தமாக பிரித்துக்கொடுத்துள்ளார்கள். முத்துஉடையாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டதாக சொல்லும் இடத்திற்கு நான் இதுவரை எந்த ஆவணம் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

14. முத்துஉடையாருக்கு பூர்வீக சொத்து இருந்ததாக சொல்வது கற்பனையானது என்றாலும் முத்துஉடையார் மற்றும் துரைசாமி உடையாருக்கு மேற்கண்ட இரண்டு மூல ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களுக்கு மேற்குபுறம் உள்ள சொத்துக்கள் அனைத்தும் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்குபுறத்தில் இரண்டு புறம் சந்து உள்ளது அதற்கும் மேற்கால் அரசன்குடி வேலாயுதத்திற்கும் இடம் உள்ளது. அந்த இடத்திற்கும் மேற்கில் 3 அடி அளவில் ஒரு சந்து உள்ளது. அதற்கும் மேற்கால் கதிர்வேலுக்கு இடம் உள்ளது. எனக்கும், வேலாயுதத்திற்கும் 3 அடி சந்து உள்ளது.

15. கடந்த 23.02.1948 தேதியிட்ட கிரையபத்திரத்தில், கண்டுள்ள சொத்து வாதியினுடைய சொத்திற்கு வடக்கிலும், வாதியினுடைய சொத்து கிழக்கிலும் அமைந்துள்ளதாக இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொது சந்து இருப்பதாக இந்த பத்திரத்தில் காண்ப்பிக்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

16. முத்துஉடையாருக்கு ஒரு பூர்வீக சொத்து இருந்ததாகவும், அந்த சொத்தை எங்களுக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. கடந்த 04.12.1932 மற்றும் 23.02.1948 ஆகிய இரண்டு பத்திரங்களில் கண்டுள்ள சொத்துக்கள் தவிர முத்துஉடையாருக்கு வேறு எந்த சொத்துக்களும் இல்லை என்றால் சரியல்ல பூர்வீகமாக சொத்து இருந்துள்ளது. நத்தம் பட்டா கொடுக்கப்பட்டு பட்டா மாற்றம் செய்யப்பட்டு அதன்பிறகு எங்களுக்கு கொடுத்தார்கள்.

17. நத்தம் பட்டா யார் பெயரில் கொடுக்கப்பட்டது என்றால் முத்துடையார் மகன் துரைசாமிக்கு கொடுத்துள்ளார்கள். அந்த நத்தம் பட்டா எந்த வருடம் கொடுக்கப்பட்டது என்றால் 1993 ல் வழங்கப்பட்டது. அதன் பிறகு நான் கிரயம் வாங்கிய பின்பு எனது பெயரில் பட்டா வழங்கப்பட்டது.

18. துரைசாமி பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த பட்டாவில் என்ன அளவு உள்ளது என்றால் கிழமேல் வடக்கு திசையில் 27 அடியும், தென்திசையில் 23 1/2 அடியும் தென்வடல் இருபுறமும் 36 அடியும் உள்ளது.

19. துரைசாமியும் மகாலட்சுமியும் சரிபாதியாக பிரித்துக் கொண்டார்கள் என்றாலும்

அதில் மணிவேலுவிற்கு கிழக்கு திசையில் 27 அடியும் மேற்கு திசையில் எனக்கு 27 அடியும் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். குழந்தைவேல் உடையார், துரைசாமி உடையார் ஆகிய இருவரும் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் பிரித்துக் கொடுத்ததாகத்தான் சொல்லி எனக்கு பட்டா கொடுத்தார்கள்.

20. குழந்தைவேல் உடையாரும், துரைசாமி உடையாரும் பாகம் பிரித்துக் கொள்ளும் போது பதிவு செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். துரைசாமி உடையார் பதிவு செய்து கொண்ட பிறகு எனக்கு கொடுத்தார். குழந்தைவேல் உடையாரும், துரைசாமி உடையாரும் பாகம் பிரித்துக் கொண்ட பத்திரத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எனக்குள்ள நத்தம் பட்டாவை நான் ஒப்படைத்துள்ளேன்.

21. குழந்தைவேல் உடையாரும், துரைசாமி உடையாரும் பாகம் பிரித்துக் கொண்ட பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்தால் எனக்கு பாதகமாக அமையும் என்பதால் அதை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

22. 1932-ம் வருடத்திய மூலபத்திரத்திலும், 1948 பத்திரத்திலும் கிழமேலாக மொத்தம் 56 காலடி தான் உள்ளது என்றாலும் தெரியவில்லை. மேற்கண்ட இரண்டு பத்திரத்திலும் 56 காலடி உள்ளது எனக்கு தெரியும் என்றாலும், அது தெரிந்தே 1999ல் ஒரு பொய்யான ஆவணத்தை என் பெயருக்கு கிரயம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, 1993 ம் வருட பட்டாவை வைத்துதான் நான் கிரயம் செய்தேன். வாதியின் முன்னிலையில் VAO மூலமாக அனுபவத்தில் இருந்த அந்த இடத்தை அளந்து அதன் பிறகுதான் நான் கிரயம் பெற்றேன்.

23. யார் யார் அளப்பதற்கு வந்தார்கள் என்றால் கிராம நிர்வாக அலுவலர் வந்தார், ஊர் மக்களும் வந்தார்கள். VAO இடத்தை அளக்கும் போது அவரிடம் எங்களுக்குண்டான சொத்து இவ்வளவு தான் என்று 1932, 1948 பத்திரத்தை நான் கொடுத்தேன் என்றால் கொடுக்கவில்லை. எங்களுடைய மூலபத்திரங்களை கிராம நிர்வாக அலுவலர் தேவையில்லை என்று சொன்னதால் நான் கொடுக்கவில்லை.

24. கிராம நிர்வாக அதிகாரி அந்த மூலப்பத்திரத்தை தேவையில்லை என்று சொன்னதற்கு எழுத்து மூலமான ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் அவர் ஆதாரம் எதுவும் கொடுக்கவில்லை. VAO விடம் மூலப்பத்திரத்தை ஏன் வாங்கி பார்க்கவில்லை என்று நான் கேட்டேனா என்றால் இல்லை.

25. மூலப்பத்திரங்களை VAO விடம் நான் ஒப்படைத்தால் எனது கிரயப்பத்திரத்தில் உள்ள சொத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்பதால் அதை அவரிடம் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கிரய பத்திரத்தை எப்போது வாங்கினேன் என்றால் 1999 ல் கிரயம் பெற்றேன். தேதி, மாதம் தெரியவில்லை.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு வேண்டுகோள் முன் வைக்கப்பட்டு ஏற்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 02.06 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct
sd/-S.Munusamy
Principal Distrit Munsif, Attur

Typed by Selvi. C. Sasikala - O.S. No.169/2002, Dt.01.10.2024.